பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 5 (17 4 68) புதன் ★ வெளியூர்: சித்திரை 6 (18-4-68) வியாழன் [இதழ்: 254

கடுந்தாக்கு!

நியூயார்க் ஏப். 16—

"ஒரு திங்களாசப் பேசித் தீர்த்து விட்டுக் கலைந்துவிட்டார்கள்; ஆனல், உருப்படியாக ஒன்றும் நடைபெறவில்லை; நீண்ட பேச்சுக்கள்; ஆனல், அனைத்தும் வெட்டிப் பேச்சுக்கள்—வெத்து வேட்டுக்கள்!"

இவ்வாறு, 'நியூயார்க் டைம்ஸ்' இதழ், அண்மையில் புதுடில்லியில் நடைபெற்று முடிவடைந்த 'உன்க்டாட்' மாநாடு பற்றிக் கருத்தறிவிக்கையில், கடுமையாகத் தாக்கி எழுதியிருக்கிறது.

ஒரே ஆலைக்கு ரூ. 1,000 கோடியா?

அதைக்கொண்டு மூன்று ஆலைகளை நிறுவலாமே!

தென்னகத்துக்கு டில்லியின் அநீதி— தா. கிருஷ்ணன் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப். 16 –

"ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் பொக்காரோ உருக்கு ஆலையை நிறுவுவதில் இந்திய அரசு முனைந்துள்ளது; இந்தப் பணத்தைக் கொண்டு தமிழகம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் மூன்று உருக்காலைகளை ஏன் நிறுவக் கூடாது" என்று, கழக உறுப்பினர் தா. கிருட்டினன் மக்களவையில் வினவினர்.

"இப்படிச் செய்வதன் மூலம், மாநிலங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கமுடியும்" என்று அவர் எடுத்துரைத்தார்.

உருக்குத்துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தில் திரு. கிருட்டினன் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்துஸ்தான் எஃகு நிறுவனம்—தேசீய நிலக்கரி மேம்பாட்டு நிறுவனம்—தேசீய சுரங்க வளர்ச்சி நிறுவனம் போன்ற அரசு நிறுவனங்கள் இயங்கும் விதம் குறித்துக் கழக உறுப்பினர் தா. கிருட்டினன் மக்களவையில் கவலை தெரிவித்தார்.

இந்துஸ்தான் எஃகு நிறுவனத்தில் மட்டும், அது இயங்கத் தொடங்கியதிலிருந்து இதுவரை ரூ. 80 கோடிக்குமேல் இழப்பு ஏற்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினர்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்த நிறுவனங்களின் நிலை அண்மையில் சீர்திருந்தும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. உற்பத்திச் சக்தி முழுமையையும் பயன்படுத்திக் கொள்ளாததும், நிர்வாகத் திறமையின்மையுமே இந்த இழப்புக்குக் காரணம்.

மற்றொரு காரணம், நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் சுட்டிக்காட்டியுள்ளதுபோல், இருக்கின்ற உற்பத்திச் சக்தியையே முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளாதிருக்கும்போது மேற்கொண்டு உற்பத்திச் சக்தியை அதிகரித்ததாகும்.

கட்சிகட்கு நன்கொடைகள்

நாடாளுமன்றத்தில் கடும் வாக்குவாதம்

புதுடில்லி, ஏப். 17—

வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும், ஜனசங்கமும், காங்கிரசும் நன்கொடைகள் பெற்றுவருவதாக இரு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள், மக்களவையில் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டனர்.

புதுடில்லியைச் சேர்ந்த 'பேட்ரியட்', 'லிங்க்' என்ற பத்திரிகைகளை வெளியிடும் நிறுவனம், இரஷியாவிலிருந்து அச்சடிக்கும இயந்திரச் சாதனத்தை இறக்குமதி செய்திருப்பது பற்றிய கேள்விகளுக்கு வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங் பதிலளிக்கையில் இது நடந்தது.

இரு தரப்பினரும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

"ஜனசங்கம், இந்தியாவிலிருந்துதான் பணம் பெறுகிறது—வெளிநாடுகளிலிருந்து அல்ல" என்று மதோக் என்பவர் கூறினர்.

"கம்யூனிஸ்டுக் கட்சியும், சில பத்திரிகைகளும் இரஷ்யாவிலிருந்து நன்கொடைகள் பெற்று வருகின்றன" என்றும் அவர் சொன்னர்.

மத்திய அரசு இலாகாக்கள்

தொடர்ந்து புறக்கணிக்க எதிர்க் கட்சிகள் முடிவு

புதுடில்லி, ஏப் 16—

மத்திய அரசின் இலாகாக்களுடன் இணைந்துள்ள ஆலோசனைக் குழுக்களைத் தொடர்ந்து புறக்கணிப்பதென நாடாளுமன்றத்தின் முக்கிய எதிர்க் கட்சிகளின் பிரமுகர்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

'ம. பி. அரசின் கட்டுப்பாடு உத்தரவு சட்ட விரோதமானது'

மத்திய அரசு அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 17—

மத்தியப் பிரதேசத்திலிருந்து பருப்பு, பயறு வகைகளை வெளியே செல்வதற்கு அந்த மாநில அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள், 'சட்ட விரோதமானது' என்று மத்திய அரசு கூறியிருக்கிறது.

நாட்டிற்குள் எந்த இடத்திற்கு வேண்டுமானலும் பருப்பை அனுப்புவதற்கான 'ஆர்டர்'களை ஏற்றுக்கொள்ளும்படி மத்தியப் பிரதேசத்திலுள்ள இரயில்வே அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு இரயில்வே போர்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

என்று, அதிகாரபூர்வமான செய்திக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

காங்கிரசு ஆட்சியின் குரலாக வானொலி!

செ. கந்தப்பன் குற்றச்சாட்டு

இந்திக்கு இடமளித்து ஏனைய மொழிகளைப் புறக்கணிப்பதற்குக் கண்டனம்

புதுடில்லி, ஏப். 16—

"'அனைத்திய வானொலியை, தனிச் சுதந்தரமுள்ள ஒரு தனி நிறுவனமாக ஆக்கவேண்டும்' என்ற சந்தா குழுவினரின் ஒருமுகமான பரிந்துரையை அரசு செயல்படுத்தாதது ஏன்?" என்று, நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் செ. கந்தப்பன் வினவினர்.

"வானொலியை அரசாங்கத்தின் ஒரு குரலாக வைத்திருக்கக் காங்கிரசுக் கட்சி விரும்பியதாலேயே அந்தப் பரிந்துரை செயலாக்கப்படவில்லை" என்றும் திரு. கந்தப்பன் குற்றஞ்சாட்டினர்.

செய்தி–ஒலிபரப்புத்துறை மானியக் கோரிக்கைமீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் கந்தப்பன் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"திரைப் படத் தொழில்துறை மிகவும் துயர நிலையை அடைந்துள்ளது. நிம்மதியற்ற நிலையில் பத்திரிகையாளர்கள் இருக்கின்றனர். இந்த நிலைமைகளை மாற்ற இந்த அரசு செய்யப் போவதென்ன?

நாட்டின் புதிய சக்திகள் உருவாச, அனைத்திந்திய வானொலியை ஒரு தனி நிறுவனமாக ஆக்கவேண்டும்.

அனைத்திந்திய வானொலி, இந்தியைத் தவிர மற்ற எல்லாத் தேசிய மொழிகளையும் புறக்கணித்துவருகிறது.

இந்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதைப் பற்றி நான் வாதிடவில்லை; ஆனல், குடியரசு நாள் விழாவின்போதும் மற்ற முக்கிய விழாக்களின்போதும், நிகழ்ச்சித் தொடர் வர்ணனைகளை ஏன் எல்லாத் தேசிய மொழிகளிலும் ஒலிபரப்பக் கூடாது?

ஒவ்வொரு வட்டார ஒலிபரப்பையும் கவனித்துக்கொள்ள மத்தியிலோ மாநிலத்திலோ ஒரு தனி அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

அயல்நாட்டு மொழி ஒலிபரப்புக்கு என்று நேரம் ஒதுக்கப்படுவது மிகவும் குறைவு; அதுவும் நடைமுறையில் கடைபிடிக்கப் படவில்லை.

திரைப்படத் தணிக்கையில் உயர்ந்த தரம் பின்பற்றப்பட வேண்டும்."

மத்திய அரசின் சனநாயக விரோதச் செயல்

சட்டமன்றக் கலைப்பு தொடர் கதையாகிறது

மக்களவையில் சனசங்க உறுப்பினர் கடும் கண்டனம்

புதுடில்லி, ஏப். 16—

"சில மாதங்களாகவே உள்துறை அமைச்சர், சனநாயகத்துக்கு அடிமேல் அடி கொடுத்து வருகிருர்; அவர் இப்படியே தொடர்ந்து இவ்விதமே செய்துகொண்டிருப்பார்; குடியரசுத் தலைவரின் அறிவிப்பை அவையில் அவர் வைப்பதும், அதன்மீது விவாதம் நடத்தும் வாய்ப்பை இந்த அவை பெறுவதும் தொடர்ந்து நடக்கும்; விவாதமும் ஒரு கட்டுக்கடங்கிய விதத்திலேயே இருக்கும்; எனவே, சட்டமன்றக் கலைப்புப் பற்றி இந்த அரசுமீது கண்டனம் தெரிவிக்க எதிர்க் கட்சிகள் விரும்புகின்றன"

என்று ஜனசங்க உறுப்பினர் திரு. வாஜ்பாயி, நாடாளுமன்ற மக்களவையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை வற்புறுத்திப் பேசுகையில் கூறினர்.

உ. பி. சட்டமன்றத்தைக் கலைத்துக் குடியரசுத் தலைவர் வெளியிட்ட அறிக்கையை, மக்களவையில் உள்துறை அமைச்சர் தாக்கல் செய்வதற்கு முன்னதாக திரு. வாஜ்பாயி, 'அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை முனமொழிந்தார்; ஆனல் அவைத் தலைவர் இதனை அனுமதிக்க மறுத்துவிட்டார்.

"வரவு — செலவுத் திட்டம் விவாதத்தில் இருந்து கொண்டிருக்கும்போது ஒத்துவைப்புத் தீர்மானங்களை அனுமதிப்பதற்கில்லை" என்பதை முன்பே தாம் அறிவித்திருப்பதாக அவைத் தலைவர் கூறினர்.

வரவு — செலவுத் திட்டத்தின் மீதும், குடியரசுத்தலைவர் அறிக்கை மீதும் விவாதிக்கும்போது அரசைக் கண்டிக்க உறுப்பினர்கட்கு வாய்ப்பு இருப்பதாகவும் அவர் கூறினர்.

அவைத் தலைவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு திருப்திகொள்ளாதநிலையில் வாஜ்பாயி, ஆத்திரத்துடன், 'சட்டமன்றத்தைக் கலைத்ததன் மூலம் இந்த அரசு சனநாயகத்துக்கு ஊறு விளைவிக்கிறது' எனக் கூறினர்.

குடியரசுத் தலைவர் அறிக்கையை உள்துறை அமைச்சர் திரு. சவாண் அவையில் தாக்கல் செய்தபோது, தி. மு. க.—சுதந்தரா—சில சுயேச்சைகள் தவிர மற்ற எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

பங்கீட்டு முறை நீடிக்குமா?

மத்திய அரசின் சிந்தனையில் மாற்றம்

புதுடில்லி, ஏப். 17—

சட்டபூர்வமான பங்கீட்டு முறையை நீட்டிப்பதா இல்லையா என்பதை, மாநில அரசுகளே முடிவு செய்யுமாறு மத்திய அரசு விட்டுவிடுமெனத் தெரியவருகிறது.

'பெரிய நகரங்களில், சட்டபூர்வமான பங்கீட்டு முறை இருக்கவேண்டும்' என்பது, அண்மைக் காலம் வரையில் மத்திய அரசின் நிலையாக இருந்துவந்தது; நல்ல விளைச்சல் நாட்டில் ஏற்பட்டிருப்பதால் நிலைமை மாறிவிட்டது; மத்திய அரசின் சிந்தனையும் மாறியிருக்கிறது!

'பற்றுக்குறை மாநிலங்களிலும், தொழில் நகரங்களிலும் சட்டபூர்வமான பாதுகாப்பு இருக்க வேண்டும்' என மத்திய அரசு வற்புறுத்தும்; மற்ற நகரங்களில், சட்டபூர்வமான பங்கீட்டு முறையைக் குடும்பக்கார்டு முறையாக மாற்றும் முடிவை மாநில அரசுகளிடம் அது விட்டுவிடும்.

"சட்டபூர்வமான பங்கீட்டு முறையை சென்னையிலும், கோவையிலும் நீக்கிவிடும் யோசனை அரசின் பரிசீலனையில் இல்லை" என்று, தமிழக அரசு தெரிவித்திருக்கிறது.

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 5 (17—4—68) புதன்

மதுவிலக்கும் 'மாபெரும்' தலைவரும்!

நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டில், காங்கிரசுக் கட்சியின் 'மாபெரும்' தலைவர் காமராசரும் கலந்துகொண்டார்; மாநாட்டில் பொருட்காட்சியைத் திறந்துவைக்கும் பணியை அவர் மேற்கொண்டார்.

மாநாட்டில் அவர் கலந்துகொண்டிருந்தார் என்றாலும், கடுந்தண்டனையை எதிர்நோக்கிக் குற்றக் கூண்டில் நின்றுகொண்டிருக்கின்ற குற்றவாளியின் நெஞ்சத்தையே அவர் பெற்றவராக இருந்திருக்கின்றார். அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவராக அவர் இருந்துவந்த நேரத்தில்தான், காங்கிரசு மாநிலங்களான மைசூரும், ஆந்திரமும் மதுவிலக்கை ஒழித்துக்கட்ட முடிவு கட்டின. இம்முடிவுக்கு எதிராக, 'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில் அம்மாபெருந் தலைவர், நாவசைத்தாரில்லை. இதன் விளைவாக—அறிந்தோ அறியாமலோ—குற்றமுள்ள நெஞ்சுடன் மதுவிலக்கு மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு அம் 'மாபெரும்' தலைவர் உள்ளாக்கப்பட்டிருக்கிறார்.

இக்குற்றமுள்ள நெஞ்சைப் பெற்றில்லாதவராக அவர் இருந்திருக்கும்பட்சத்தில், மதுவிலக்கை ஒழித்துவிட்டமைக்காக, காங்கிரசுக் கட்சியினரால் ஆளப்பட்டு வருகின்ற மாநிலங்களை—வன்மையாக இல்லை என்றாலும் நயமாகவாவது—அவர் கண்டித்திருக்க வேண்டும். அவ்வாறு கண்டிப்பதுதான் அவருடைய கடமையாகும்; 'கண்டிப்பார்' என்றுதான், பலரும் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், 'மாபெரும்' தலைவர் காமராசர் அவர்களோ, காங்கிரசு மாநிலங்களில் மதுவிலக்கை ஒழித்துவிட்டதை நியாயப்படுத்த அரும் முயற்சி செய்திருக்கின்றார்; அதற்காகச் சுற்றிவளைத்து, பொருத்தமற்ற சமாதானத்தையும் கூறியுள்ளார்.

காங்கிரசு மாநிலங்களில் மதுவிலக்கு ஒழிக்கப்பட்டுவிட்டமைக்கு, மதுக் குடியின் தீய விளைவுகள் குறித்து அம்மாநிலங்களில் ஏற்றவகையில் பிரச்சாரம் செய்யாமையையும் மதுக் குடிக்கு எதிராகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்காமையையும், அந்த 'மாபெரும்' தலைவர் சமாதானமாகக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்டிருக்கின்ற இச்சமாதானத்தை, ஏற்கத்தக்கதாகவே வாதத்திற்காக ஒப்புக்கொள்ளுவதானாலும், 'கள் குடிப்பது நலம் பயக்கக்கூடியது என மக்கள் தீர்மானித்துக்கொண்டு, மதுக் கடைகளை மீண்டும் திறக்கும்படி—மதுவிலக்கு ஒழிக்கப்பட்ட காங்கிரசு மாநிலங்களிலுள்ள மக்கள்—காமராசரையோ, அல்லது அம்மாநிலங்களிலுள்ள காங்கிரசு ஆளவந்தார்களையோ மண்டியிட்டு வேண்டிக்கொண்டார்களா' என்ற நியாயமான கேள்வி கிளம்பத்தான் செய்யும்; அந்த நியாயமான கேள்விக்கு, 'மாபெரும்' தலைவர் காமராசர் பதிலளிக்கத்தான் வேண்டும்.

காங்கிரசு ஆளும் மாநிலங்களில் மதுவிலக்கு ஒழிக்கப்பட்டுள்ளமைக்கு, 'மதுவிலக்குக்கு உடன்பாடாகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்காமையே காரணம்' எனக் காட்டுகின்ற காமராசர் அவர்கள், மற்றொரு கேள்விக்கும் பதிலளித்தாக வேண்டும்; அதாவது, மதுவிலக்குக்கு உடன்பாடாகப் பொதுமக்கள் ஆதரவைத் திரட்டாது காங்கிரசுக் கட்சி, இந்த இருபதாண்டுக் காலமாக என்ன செய்துகொண்டிருந்தது? ஏன் இத்துறையில், கடுகளவு கவலையும் செலுத்தாமல் இருந்துவந்தது?—இதற்குக் காமராசர் கூறக்கூடிய சமாதானம் என்ன?

மதுவிலக்குக்கு ஆதரவாகப் பொதுமக்கள் கருத்தை உருவாக்கக் காங்கிரசுக் கட்சி பிரசாரம் செய்யாது இருபதாண்டுக் காலமாக இருந்துவந்தது எப்படியோ இருக்கட்டும்; காங்கிரசுக் கட்சியிலிருந்த சில குறிப்பிடத் தகுந்தவர்கள், மதுக்குடிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்திருப்பதை என்னென்பது? எப்படி மறைப்பது?

மதுக்குடிக்கு ஆதரவாகக் காங்கிரசுத் தலைவர்கள் பிரசாரம் செய்தார்களா? 'இவ்வாறு கூறுவது முழுப் பொய்—முதல்தரமான கற்பனை—அரசியல் பகையின் காரணமாகக் கூறுகின்ற கட்டுக்கதை—என்றுதான் எவருக்கும் கூறத் தோன்றும்; ஆனால், நாம் கூறுவது உண்மை.

பாண்டிச்சேரி சட்டமன்றத்துக்குத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில், இந்த 'மாபெரும்' தலைவர் காமராசர் என்ன கூறினார்? எதைப் பிரசாரம் செய்து அத்தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு வெற்றி தேடித் தந்தார்?

'புதுவை மக்களே! பாண்டிச்சேரி வாக்காளர்களே! காங்கிரசுக் கட்சிக்கு வாக்களித்தால் கள்ளுக் கடைகள் மூடப்பட்டுவிடும் என்ற அச்சம் தேவை இல்லை; காங்கிரசு ஆட்சியில் கள்ளுக் கடைகள் மூடப்படமாட்டாது; காங்கிரசுக் கட்சிக்கே வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்' என்று—அப்பொழுது மதுக் குடியை ஆதரித்துப் பிரசாரம் செய்த காங்கிரசுத் தலைவர் யார்? இதே 'மாபெரும்' தலைவர் காமராசர்தானே? இதை, இதற்குள்ளாகவா மக்கள் மறந்துவிடுவார்கள்?

'மாபெரும்' தலைவர் காமராசர் அவர்களுக்கு மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா—என்ற வாதத்தைக் கிளப்புவதற்காக, மேலே குறிப்பிட்டுள்ள நிகழ்ச்சியை இத்தொடர்பில் நாம் குறிப்பிடவில்லை; 'மதுவிலக்குக் கொள்கைக்கு ஆதரவாக மக்கள் கருத்தை உருவாக்குவது' என்ற இலட்சியத்தில் இருக்கின்ற பற்றைவிட, 'தொடர்ந்தாற்போல் காங்கிரசுக் கட்சியிடமே ஆட்சி அதிகாரம் இருந்துவரப் பார்த்துக்கொள்ளுவது என்ற குறிக்கோளில்தான், இந்த 'மாபெரும்' தலைவர் காமராசருக்கு மிகுதியான அக்கறையும் ஆசையும் இருக்கிறது' என்ற கருத்தை வலியுறுத்தவே அதனை இங்கு குறி பிட்டிருக்கின்றோம்.

மதுவிலக்குக் கோட்பாட்டிற்கு ஆதரவாக மக்கள் கருத்தை உருவாக்கப் பிரசாரம் செய்யத் தவறிவிட்டதை எடுத்துக்காட்டி, காங்கிரசு மாநிலங்கள் மதுவிலக்கை ஒழித்துள்ளமையை நியாயப்படுத்த முயற்சித்திருக்கின்ற 'மாபெரும்' தலைவர் காமராசர், மதுவிலக்கு இலட்சியத்தில் பொதுவாக இன்றையத் தமிழக அரசுக்கும் குறிப்பாக முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கும் இருந்திடக்கூடிய அசைக்கமுடியாத நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் குறைத்துக்காட்ட முனைந்திருக்கின்றார்.

'தமிழகத்தில், மதுவிலக்கு இலட்சியத்துக்குப் பொதுமக்கள் ஆதரவாக இருக்கின்றார்கள்; அதன் காரணமாகத்தான் இன்றையக் கழக அரசு மதுவிலக்கைத் தொடர்ந்து அமல் செய்ய முடிவு கட்டியுள்ளது' எனக் கூறுவதன் மூலம், 'மதுவிலக்குக் கொள்கையில் இன்றையத் தமிழக அரசுக்கு இருந்துவரக்கூடிய நம்பிக்கையையும், உறுதிப்பாட்டையும் சிறிதாக்கிக் காட்டியிருக்கின்றார்' என்பதுதானே பொருள்?

'ஆட்சியைக் கைப்பற்றவேண்டும்' என்பதற்காக, 'மாபெரும்' தலைவர் காமராசர், பாண்டிச்சேரி தேர்தலின்போது, கள் குடிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்திருப்பதுபோல் கழகம் செய்ய முன்வராது—அந்தத் தீய கருத்து, கழகத் தலைவர் அண்ணாவின் நெஞ்சில் இடம்பெறவும் பெறாது!

—கா. க.

ஈடு இணையற்ற பெருந் தலைவர் அண்ணா

அவர்தம் அமெரிக்கப் பயணம் தமிழக அரசுக்குச் சீரிய பயனளிக்கும்

'இம்மத்' இதழின் உளமார்ந்த பாராட்டு

'இம்மத்' என்னும் ஆங்கில வார இதழில், 'தி. மு. கழகத்தின் ஓராண்டுக்கால ஆட்சி' என்ற தலைப்பில் திரு. கே. எஸ். இராமானுசம் என்பார் எழுதியுள்ள கட்டுரையில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் மேலை நாட்டுப் பயணம் குறித்தும், அதனால் தமிழகத்துக்கு ஏற்படவிருக்கும் பயன் குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துரை வருமாறு :—

தமிழக முதல்வர் அண்ணா அவர்கள், ஐக்கிய அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்; 17—4—68 முதல் மூன்று வாரங்கள் அவர் அங்கே சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறார்; பின்னர், ஜப்பானுக்கும் கீழை நாடுகளுக்கும் சென்று திரும்பயிருக்கிறார்.

ஓராண்டுக் காலம் தமிழக முதல்வராக இருந்து அவர் தேர்ந்த அனுபவம் பெற்றிருக்கிறார்; எனவே, இப்போது அமையும் இந்தச் சுற்றுப்பயணம் தமிழக அரசுக்குச் சீரிய பயன்களைத் தரும்.

அமெரிக்காவும் ஜப்பானும், கடந்த 30-40 ஆண்டுகளாகத் தம் பட்டறிவு மூலம் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளன. அதேபோல்,

"மக்கள் எதற்கும் அரசை மட்டுமே எதிர்பார்க்காமல் தன்னம்பிக்கையுடன் கடுமையாக உழைப்பதன்விளைவாகவே முன்னேற முடியும்; அந்த வழிகாட்டுவதே சீரிய அரசியல் தலைமை"

என்பதை அண்ணா அவர்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்.

கடந்த 20 ஆண்டுக்காலக் காங்கிரசின் ஆதிக்க ஆட்சி அகற்றப்பட்டு, '1972 வரையில் தமிழக ஆட்சிப் பொறுப்பு இவர்கள் கையில்தான்' என்ற உறுதியான நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றது.

ஆனால் இன்றோ, இந்தியா முழுமையிலும் மக்களாட்சியின் மாண்புக்கு ஓர் எடுத்துக்காட்டான சான்றாகத் தமிழக அரசு விளங்குகிறது!

அண்ணா அவர்கள், தமிழ் மண்ணின் ஈடு இணையற்ற தனித்தன்மை வாய்ந்த பெருந் தலைவர்!

தமிழகத்தின் எல்லாவகை—எல்லா நிலை மக்களும் போற்றிப் புகழ் பாடும் வகையில், கடந்த 12 மாதத் தமிழக ஆட்சியைச் சிறப்பாக அண்ணா அவர்கள் நடத்தி இருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் அண்ணாவின் கட்சி, எந்த நிலையிலும் தலையிடுவதே இல்லை!

முந்தைய காங்கிரசு ஆட்சிபோலன்றி, அரசு அலுவலர்கள் நிலைமைக்கேற்பத் தாமே தக்கவாறு முடிவு செய்து சிறப்பாகப் பணியாற்றத் தமிழக அரசு அவர்களை ஊக்குவிக்கிறது!

காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கையை அண்ணாவின் அரசு மனப்பூர்வமாக ஏற்றுச் செயல்படுத்துவது சிறந்த ஒரு பாரம்பரியம் ஆகும்.

தம் மாநில வருவாயைப் பெருக்கிக்கொள்ள மதுவிலக்கைக் கைவிட காங்கிரசு அரசுகள் முனைகின்ற இந்நாளில், மதுவிலக்கை முழு அளவில் தமிழகத்தில் செயல்படுத்துவதன் மூலம் அண்ணா அவர்கள் ஓர் உண்மைக் காந்தீயவாதியாகிறார்!

'ரூபாய்க்குப் படி அரிசி'த் திட்டம், நல்ல பயன் தரும் சிறந்த கொள்கை. மத்திய அரசு இதற்குத் துணை செய்யாமையாலும், தமிழகப் பருவ நிலை தவறியதாலும்,

(3-ம் பக்கம் பார்க்க)

நீர் வளத்தைக் கண்டறிய விவசாயிகளுக்கு உதவி

பாங்கிகளுக்கு அமைச்சர் செ. மாதவன் யோசனை

சென்னை, ஏப். 15—

"கிணறு வெட்டுவதற்காக விவசாயிகளுக்குப் பணம் கொடுப்பதோடு பாங்கிகள் திருப்தியடைந்துவிடக் கூடாது; கிணறு வெட்டுவதற்கான இடத்தைக் கண்டறிந்து கூற ஓர் அமைப்பு இல்லை.

"பணம் செலவு செய்து வெட்டிப்பார்த்த பின்னர்தான், 'தண்ணீர் கிடைக்காது' என்பது புரிகிறது; எனவே, இதற்காக ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை பாங்கிகள் ஏற்படுத்த வேண்டும்.

"விவசாய உறுப்பினர் உரிய தொழில் நுட்ப அறிவு பெற, மற்ற நாடுகளில் உள்ள விவசாய நிறுவனங்களுடன் நில அடமான மத்திய பாங்கி தொடர்புகொண்டு ஆவன செய்யவேண்டும்"

இங்கு நடைபெற்ற மத்திய நில அடமான பாங்கியின் 36-வது மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்ட யோசனையை அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

இந்த யோசனையைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும், விவசாய உறுப்பினர்களுக்கான தொழில் நுட்ப உதவியளிக்கும் பிரிவை தமது பாங்கி விரைவில் தொடங்கும் என்றும், போர்டு நிறுவனத்தின் உதவியுடன் தரைக்கடியில் உள்ள நீர் வளத்தைக் கண்டறிய ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் மத்திய நில அடமான பாங்கியின் தலைவர் திரு. என். எஸ். இராமலிங்கம் தெரிவித்தார்.

மொரார்ஜியால் முடியாதது அண்ணா ஆட்சியில் நடந்தது

பெருமைப்படத்தக்க பல சாதனைகளைப் புரிந்துள்ளது தி.மு.க. அரசு

'வேளாண்மைத் துறையில் புரட்சிகர மாறுதல்'— பம்பாய் ஆங்கில இதழின் மதிப்பீடு

"இந்தியாவில் காங்கிரசு அல்லாத - கூட்டு அமைச்சரவை அற்ற - தனிக் கட்சி ஆட்சி அமைத்து வெற்றிகரமாக ஓராண்டை முடித்துள்ள தென் மாநிலமான தமிழகமும், அதன் தலைவர் அண்ணாவும் புரிந்துள்ள சாதனைகள் குறித்துத் தாராளமாகப் பெருமைப்படலாம்.

"தி.மு.க. நிர்வாகம், 'இனியுள்ள 4 ஆண்டுகளையும் டில்லியின் தொல்லையோ, காங்கிரசின் தொல்லையோ இன்றி ஆளுவோம்' என்ற முழு நம்பிக்கையுடன் இப்போது இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது; மாநிலத்தில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டபோதிலும் எல்லாவற்றையும் தி.மு.க. அரசே கவனித்துக் கொள்ள முடியாது; அதற்கு மத்திய அரசின் 'கருணைப் பார்வை'யும் வேண்டும்"

என்று, பம்பாயிலிருந்து வெளியாகும் 'காரவான்' ஆங்கில ஏட்டின், மார்ச் இதழில் வெளியாகியுள்ள கட்டுரையில் கருத்தறிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :—

"நாங்கள் செய்துள்ளதைப் போல எந்தக் காங்கிரசு அரசாவது, மேலும் ரூ. 6 கோடிக்கு வருமானம் வரக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்தியதுண்டா?"— கடந்த 12 மாதங்களில் அடைந்துள்ள முன்னேற்றத்தை நினைவுகூர்கையில், இவ்வாறு வினவினார் முதலமைச்சர்; 'மத்திய அரசு, மாநிலத்துக்குச் சரியான நிதியுதவி எப்போதுமே அளிக்கவில்லை' என்று அவர் புகார் செய்தார்!

உணவுத் துறையில் ஒரு மகத்தான சாதனையை தமிழ்

(3 ம் பக்கம் பார்க்க)

விவசாயிக்கு உதவுவதில் அரசு காட்டும் ஆர்வம்

பாங்கிகள் மூலம் கடன் பெறுவதில் சங்கடங்கள் குறையும்

சட்ட விதிகளைத் திருத்துவது குறித்து அமைச்சர் மாதவன் அறிவிப்பு

சென்னை, ஏப். 15—

"விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் எளிய முறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்; அதற்கேற்றபடி சட்ட விதிகளைத் திருத்துவது பற்றி இன்னும் சில நாட்களில் முடிவெடுக்கப்படும்''

என்று சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் இன்று இங்கு தெரிவித்தார்.

மத்திய நில அடமான பாங்கியின் 36-வது மாநாட்டில் அமைச்சர் மாதவன் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது :—

"விவசாயிகளுக்கு எவ்வளவு—எந்த அளவுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும் என்பதில் உள்ள நடைமுறை விதிகளில் இருக்கும் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டும். சட்ட விதிகளை மாற்றினாலும், பாங்கியின் விதிமுறைகளை மாற்றினால்தான் வெற்றிகாண முடியும்.

எல்லோருடைய நோக்கமும், 'விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டும்' என்பதாகத்தான் இருக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு உதவும் முறைகளைச் செயல்படுத்தும்போது சில குறைபாடுகள் இருக்கும்; இந்தக் குறைபாடுகளுக்குச் சமுதாயத்தின் அமைப்புதான் காரணம்.

நில அடமான பாங்கி யாருக்குக் கடன் கொடுக்கிறதோ, அந்தக் கடன் அவர்களுக்குப் போய்ச் சேருமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்; இதுதான் அரசின் முக்கிய நோக்கம்.

உணவு உற்பத்தியைப் பெருக்கப் பாடுபடும் விவசாயி, அதற்காகவே இந்தக் கடனைப் பயன்படுத்த வேண்டும். அப்படிக் கொடுக்கப்படும் கடன் யாருக்குக் கொடுக்கிறோமோ அவர்கள், கடனைத் திரும்பக் கொடுக்கும் நிலையில் உள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

விவசாயிகளுக்கு என்னென்ன உதவிகள் தேவையோ அவை அனைத்தையும் வழங்க அரசு தயாராக உள்ளது.

நிலங்களையெல்லாம் ஒன்ருகச் சேர்த்து, விவசாயிகளுக்கு உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவி செய்யலாமா என்ற யோசனை இருந்துவருகிறது. இதனைச்சட்டபூர்வமாக பஞ்சாபில் செய்திருப்பதுபோல் செய்யலாமா என்று ஆராய்ந்த அதிகாரிகள், 'அது, தமிழகத்திற்கு ஏற்றதல்ல' என்று கூறியிருக்கிருர்கள்.

இதைச் சட்டப்படி செய்யமுடியா விட்டாலும்கூட, விவசாயிகளைக் கட்டாயப்படுத்தாமல் நீர் வசதிகளை அடிப்படையாகக்கொண்டு நிலங்களை ஓர் அமைப்பின்கீழ் கொண்டுவந்துவிட்டால் நாம் வெற்றிபெற முடியும் என்ற யோசனையும் எனக்கு இருக்கிறது; இதனை நாம் இப்போது செய்யாவிட்டால் பிறகு நமது முயற்சிகள் பயனற்றுப் போய்விடும்.''

ஈடு இணையற்ற...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாநிலம் முழுமையிலும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாமற் போய்விட்டது.

உலகத்தின் பல நாடுகளில் இருந்து அறிஞர்கள் வந்து கலந்துகொண்ட உலகத் தமிழ் மாநாடு, கழக அரசின் உணர்ச்சி ஆர்வம் நிறைந்த ஈடுபாட்டின் காரணமாகவே மிகச் சிறப்பாக நடைபெற்று நிறைவுற்றது.

தமிழ் மண்ணின் வரலாற்றில் எந்த நாளிலும் இந்த அளவு உணர்ச்சிக் கனிவோடு தமிழர் தம் தாய் மொழிப் பற்றைக் காட்டிக் கொண்டதில்லை — எழுச்சி பெற்றதில்லை !

தமிழகச் சட்டமன்றத்தில் நல்ல பெரும்பான்மையுடன் 'இந்தி தமிழகத்துக்கு வேண்டாம்' என்று எடுத்த முடிவு, மாணவரின் அச்சம் நீக்கி—நல்லெண்ணம் மலர்ந்து—நம்பிக்கை ஒளிவிட எடுக்கப்பட்ட தவிர்க்க முடியாததொரு நல்ல முடிவு !

இந்தி திணிக்கப்படுவதன் விளைவால் எழும் உண்மையான அச்சத்தை எந்த அரசும் புறக்கணிக்க முடியாது!

தொழிலாளர் பிரச்சினையைத் தீர்ப்பதில் முதல்வர் அண்ணு அவர்களும், சட்ட அமைச்சர் மாதவன் அவர்களும் நிதானத்தோடும், மனிதாபிமானத்தோடும் நடந்துகொள்கிருர்கள்.

தொழிலாளரிடம் பரந்த மனத்துடன் நடந்துகொள்க' என்று தொழிலதிபர்களிடம் வாதிடும் அவர்கள்,'பொறுமை காட்டிச் செயல் புரிக' என்று தொழிலாளர்களுக்கும் அறிவுரை வழங்குகிருர்கள் !

"மாநில அரசுகள் எதற்கும் மத்திய அரசையே எதிர்பார்த்து நிற்கும் நிலை மறி, மாநில அரசு—மத்திய அரசு உறவு புதிய வகையில் அமைந்தாக வேண்டும்'' என்று வலிமை மிக்க கழக அரசு மத்திய அரசினை வற்புறுத்திக்கொண்டிருக்கிறது !

நன்றியறிவிப்பு

★

மன்னை நாராயணசமி

"தஞ்சை மாவட்ட உள்ளாட்சித் துறைத் தொகுதியில் நடைபெற்ற சட்டமன்ற மேலவைத் தேர்தலில், கழக வேட்பாளர் திரு. கோ. சி. மணி முதல் வாக்குப் பெற்று வெற்றியடைய வாக்களித்த, ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும், பேரூராட்சி உறுப்பினர்களுக்கும், வெற்றிக்கு அயராது பாடுபட்ட தோழமைக் கட்சியினருக்கும், கழகத் தோழர்களுக்கும், வட்ட—நகரச் செயலாளர்களுக்கும், சட்டமன்ற—மாவட்டக் குழு—பொதுக் குழு உறுப்பினர்களுக்கும், தஞ்சை மாவட்ட தி. மு. க. சார்பில் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன் ''

என்று தஞ்சை மாவட்ட தி.மு.க செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அறிவிக்கிருர்.

தில்லை வில்லாளன்

"நாடாளுமன்ற மேலவைத் தேர்தலில் கழக வேட்பாளராக என்னைப் போட்டியிடச் செய்து வெற்றிபெறச் செய்த பேரறிஞர் அண்ணு அவர்களுக்கும், மற்ற சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், வெற்றிக்கு வாழ்த்துக் கூறி நேரிலும், அஞ்சல்—தந்திகள் மூலமும் என்னை ஊக்குவித்த கழகத் தோழர்கள்—வழக்கறிஞர்கள்—நீதித்துறைப் பெரியவர்கள்—நண்பர்கள் — பொது மக்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் ''

என்று, தோழர் தில்லைவில்லாளன் எம்.ஏ.பி.எல்., எம்.பி. அறிவிக்கிருர்.

க. அறிவழகன்

கடந்த ஏப்ரல் 8-ம்நாள் நடைபெற்ற சென்னை-செங்கற்பட்டு மாவட்ட ஆசிரியர் தொகுதி சட்டமன்ற மேலவை உறுப்பினருக்கானத் தேர்தலில், எனக்குச் சிறந்த வெற்றியினைப் பெற்றுத்தர இடையருது பணியாற்றிப் பெருவாரியான வாக்குகளை நான் பெறுவதற்கு உழைத்த ஆசிரியப் பெருமக்கட்கும், நாடாளுமன்ற — சட்டமன்ற — நகர்மன்ற உறுப்பினர்களுக்கும், கழகக் காவலர்களுக்கும், துணைமன்றத் தோழர்களுக்கும், தோழமைக் கட்சி நண்பர்களுக்கும் என் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆசிரியப் பெருமக்கள் பெருவாரியான வாக்களித்துத் தங்கள் கருத்திற்கு வலிவு தேடும் முறையில் எனக்கு வெற்றி வாய்ப்பினை நல்கியமைக்கு என் பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் ''

என்று, தோழர் க. அறிவழகன் எம்.ஏ.எம்.எல்.சி. அறிவிக்கிருர்.

கோ. சி. மணி

"8—4—68 அன்று நடைபெற்ற தமிழகச் சட்டமன்ற மேலவைக்குத் தஞ்சாவூர் உள்ளாட்சிமன்றத் தொகுதியிலிருந்து தி. மு. கழக வேட்பாளனகப் போட்டியிட்ட என்னை ஆதரித்து வாக்களித்து, முதலாவதாகவே வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களுக்கும், தேர்தல் பணியில் இரவு-பகல் என்று பாராது, அயராது பணிபுரிந்த அன்புத் தோழமைக் கட்சித் தோழர்கட்கும், கழகத் தோழர்கட்கும் சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தி.மு.க. வட்ட—நகர—கிளைச் செயலாளர்களுக்கும், பொதுக் குழு உறுப்பினர்களுக்கும், மாவட்டச் செயலாளர் அவர்கட்கும் மற்றும் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மற்றும் என் வெற்றியைப் பாராட்டி தந்திமூலமும், அஞ்சல் மூலமும் வாழ்த்துக்கள் அனுப்பியவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் ''

என்று, தோழர் கோ. சி. மணி எம்.எல்.சி., அறிவிக்கிருர்.

கரூரில் காமராசர் உதிர்த்த முத்துக்கள்!

கரூர், ஏப். 14—

இன்று மாலை கரூரில் நடைபெற்ற காங்கிரசுப் பொதுக்கூட்டமொன்றில் பேசிய காமராசர், தமது பேச்சைத் துவங்குகையிலேயே, 'தி. மு. க -வினர் வெளிநாட்டுப் பணத்தைக்கொண்டும், உள்நாட்டுக் கோடீசுவரர்களின் துணைகொண்டும் ஆட்சியைப் பிடித்துவிட்டனர்' எனக் குற்றஞ்சாட்டினர். அவர் பேச்சின் சில வரிகள் :—

"தி. மு. க.-காரன், ரூபாய்க்கு மூணு படி அரிசி போடறேன்னுனே—போட்டானு? சுத்தப் பொய்ன்னேன்! இந்த ஊரில படி அரிசி என்ன விலைன்னேன்!

கூட்டத்தில் ஒருவர் :—'ஒண்ணே முக்கால் ரூபாய்.'

மேடையிலிருந்தவர் :— 'இரண்டரை ரூபாய்.'

காமராசர் :— 'போன வருஷம் (அதாவது காங்கிரசு ஆட்சியில்) படி என்ன விலைன்னேன்.'

கூட்டத்தில் ஒருவர் :—'மூணரை ரூபாய்.'

காமராசர் :— 'யாரவன் — உட்கார் ! சீ, சீ ! உட்கார் !'

(இதனையடுத்து சிறிது குழப்பம் ஏற்பட்டது; பிறகு காமராசர் பேச்சைத் தொடர்ந்தார்)

இந்தச் சமுதாயத்தை உடைச்சாகணுமனேன்! இதை உடைக்கலேண்ணு என்ன ஆகும்னேன்! தேசம் உருப்படாதுன்னேன்!

உழை உழைங்கிருன்; உழைக்காமெ இருக்கானு என்ன? உழைச்சா பலன் கிடைக்குதா என்ன? உழைக்கிறவா உழைச்சிக்கிட்டே இருக்கவேண்டியது தான்—உழைப்பை இன்னெருத்தன் சுரண்டருன்னேன்; யாரவன் ?—பணக்காரன்னேன்! (மேடைப்பக்கம் திரும்பி) 'பணக்காரன்னு' நான், கரூர்லே உள்ள பணக்காரங்களைச் சொல்லலே! கோடி கோடியா வைச்சிருக்கானே, கோடீசுவரன்—அவனைச் சொன்னேன்! கோடி பணம் இருந்தா அவன் ஈசுவரனும்! மனிதன்கூட அல்லாவாம் -- கடவுளாம்! பணக்காரனைக் கடவுள்னு சொல்லலாமா? பணக்காரனுக்கு மோட்சத்திலே இடமில்லேன்னு கிறிஸ்து பெருமானே சொல்லிட்டார்! அதனாலே, இதை உடைக்கணும்னேன்!

(1-ம் பத்தி பார்க்க)

(5-ம் பத்தி தொடர்ச்சி)

பணத்துக்கு மரியாதை கொடுக்காத கட்சி உண்டான்னேன்? தி.மு.க. அப்படியா? சுதந்திரா அப்படியா? நம்ம கட்சியிலேயும் அப்படி இருக்குன்னேன்! இதை ஒழிக்க, நல்ல காங்கிரசுக்காரன் முன்வர வேண்டாமா? இதை நான் சொன்னு, என்மேலே கோபம்! எனக்கு பயமில்லை!

இன்னிக்கு தேசம் பூராவும் மதிக்கிற தலைவர் உண்டா? நேரு இருந்தார் — மறைஞ்சுட்டார்—மறைஞ்சுட்டாரில்லையா?

முதன் மந்திரிகள் இருக்கலாம்; பிரதம மந்திரிகூட இருக்கலாம்; அவங்களை ஜனங்க மதிக்கிருங்களான்னேன்! இல்லைன்னேன்! இப்படியே போனு, தேசம் உருப்படுமான்னேன்?

உழைப்பை மதிக்கிறவன், தி. மு. க.-விலே உண்டான்னேன்? சுதந்திராவிலே உண்டா? நம்மகிட்டேயும் இல்லேன்னேன்! எவன் எவனே மாலை வாங்கிட்டுப் போனுன்னேன்! உழைக்கிறவனை—உண்மையானவனை, எங்கேன்னு தேடிப்பிடிக்கிற நிலைமை இருக்குன்னேன்."

மொரார்ஜியால் முடியாதது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநிலம் செய்துள்ளது; 'நெற்களஞ்சியம்' என்று கருதப்படும் தஞ்சை மாவட்டம், நெல் உற்பத்தியை இருமடங்காகப் பெருக்கியுள்ளது.

மேலும், ரூ. 20 கோடி செலவில் மேற்கொள்ள இருக்கும் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் கொடுத்துவிட்டால், அதிகப்படியாக 9 இலட்சம் ஏக்கர் நிலம் வேளாண்மைக்குக் கொண்டு வரப்பட்டுவிடும்.

ஆனல், தமிழகம் கொடுத்துள்ள இத்திட்டத்தின் மீது மத்திய அரசு தூங்கிக்கொண்டிருக்கிறது!

தஞ்சை மாவட்டம் வழியாகச் செல்லும் காவிரி ஆற்று நீர் கடலில் சேருவதற்கு முன்னதாகவே முழுவதும் பாசனத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது.

மற்றெரு ஆருன தாமிரவருணியின் நீர் கடலில் போய்ச் சேருவதே இல்லை; ஒவ்வொரு கடைசித் துளித் தண்ணீரும் பாசனத்துக்குப் பயன்படுத்தப் படுகிச்து!

" 'நாங்கள் முன்னேறிவிட்டோம்' என்றும், 'இனி எங்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை' என்றும் மத்திய அரசு நினைப்பதுபோல் தெரிகிறது; நாங்கள் இப்போது முன்னேற்றத்தின் நடுப் பகுதியில் இருக்கிறேம்; இன்னும் இறுதிக்கட்டத்தை எட்டவில்லை" என்று அண்ணு கூறியுள்ளார்.

நெல் உற்பத்தியில் இப்போதைய வேகம் தொடர்ந்து நீடிக்குமானல், அடுத்த 9 மாதங்களில் மைசூருக்கும் - கேரளத்துக்கும் அரிசி ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் தமிழகம் இருக்கும். ஆனல் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு மத்திய அரசு கோடுக்கும் உதவியைப் பொறுத்துத்தான் அது இருக்கும் !

விவசாய உற்பத்தியின் சாதனை, அரிசி விலை ஒரே சீராக இருக்க உதவியிருக்கிறது!

சென்னையிலும் கோவையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி விற்கும் திட்டத்தை அண்ணு கொண்டுவந்தபோது, 'மாநிலத்தின் வருவாயை இத்திட்டம் சாப்பிட்டுவிடும்' என்று அஞ்சப்பட்டது; ஆனல் அதற்கு நேர்மாருக, அரிசி இன்றும் வெளிக் கடைகளில் படி ரூ. 1.25-க்குக் கிடைக்கிறது!

அண்ணுவின் ஆட்சியில் மற்றெரு மகத்தான சாதனை-திருப்பம் என்னவெனில், பாங்குகளின் போக்கில் ஏற்பட்டுள்ள ஒரு புரட்சிகரமான திருப்பமாகும். வர்த்தகப் பாங்குகள் இப்போதுதான் முதன்முதலாக விவசாயிகட்கு எட்டரை சதவீதம் வட்டிக்குக் கடன் கொடுக்க முன்வந்துள்ளன!

'விவசாயக் காரியத்துக்காகத் தரப்படும் பணத்துக்கு 6 சதவீதத்துக்குமேல் வட்டி வாங்கக்கூடாது' என்று அண்ணு உறுதியான கருத்துக் கொண்டிருக்கிருர்!

எட்டரை சதவீதம் வட்டி என்பது சற்றுக் கூடுதலானதுதான் என்ருலும், அதை ஒரு முதல் நடவடிக்கையாக ஏற்று அவர் வரவேற்கிருர்!

மொரார்ஜி தேசாய் கேட்டுக் கொண்டபோதும், 'அதற்காகத் தனிச் சட்டம் கொண்டுவரப்படும்' என்று மிரட்டியபோதும் கடன்தர முன்வராத தமிழகப் பாங்கிகள், இப்போது அண்ணு ஆட்சியில் தாமாகவே கடன் கொடுக்க முன்வந்துள்ளன !

விவசாயிக்கு வர்த்தகப் பாங்கிகள் கடன் கொடுக்க முன்வந்திருப்பது, பாங்கிச் சட்டத்தில் நல்லதொரு மாற்றமாகும்! ஆனல், இதற்கும் டில்லியின் சம்மதம் எதிர்பார்க்கப்படுகிறது !''

சட்டம்--ஒழுங்கு கெட்டது எங்கே?

நீதி விசாரணை நடத்தக் காங்கிரசார் ஒப்புக்கொள்வாரா?

காமராசருக்கு அன்பழகன் அறைகூவல்

சென்னை, ஏப். 17—

"காங்கிரசுக்காரர்கட்குத் தைரியமிருந்தால், சென்னையில் ஒரு கூட்டம்போட்டு, யாரை வேண்டுமானாலும்—தலைமையமைச்சர் இந்திரா காந்தியையோ, மொரார்ஜி தேசாயையோ, வேறு எந்த அமைச்சரையோ வேண்டுமானால்—அழைத்து, 'தமிழக அரசு' செய்வது இன்னின்னது தவறு' என்று குறிப்பிட்டுப்பேசட்டும்; அதற்கு அடுத்த நாளே ஒரு கூட்டம் போட்டு நான், அதற்குப் பதில் சொல்லுகிறேன்; இதற்குக் காமராசர் தயார் தானா?"

என்று, நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அறைகூவல் விடுத்தார்.

சென்னை 93-வது வட்டம் மக்கள் திலகம் மன்றத்தின் சார்பில், 14—4—68 அன்று கோடம்பாக்கம் இரயில்நிலையம் அருகில் நடந்த கூட்டத்தில் பேராசிரியர் அன்பழகன் பேசினார்.

இக்கூட்டத்துக்கு தோழர் மா. சக்கரபாணி தலைமைவகித்தார்.

முரசொலி மாறன் எம்.ஏ., எம்.பி., மாணவர் இரா. சனார்த்தனம், மா. செங்குட்டுவன், இளம்பரிதி, வை. பாலசுந்தரம், மற்றும் பலர் பேசினர்.

வட்டச் செயலாளர் கோ. ச. துரை நன்றி கூறினார்.

அமைதி நிலவுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை!

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"அனைத்திந்தியாவிலும், சட்டம்—ஒழுங்கு எந்த அளவுக்குக் காப்பாற்றப்பட்டிருக்கிறது என்பதை விசாரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிமன்ற நீதிபதி ஒருவரை நியமித்து, விசாரணை நடத்தட்டும்.

காங்கிரசு ஆட்சி நடத்தும் ஆந்திரத்திலும், மைசூரிலும், மற்ற மாநிலங்களிலும் எந்த அளவுக்குச் சட்டம்—ஒழுங்கு கெட்டிருக்கிறது என்பதையும் ஆராயட்டும்; கழக ஆட்சி நடக்கும் தமிழகத்தைப் பற்றியும் ஆராயட்டும்.

'தமிழகத்தில்தான் மற்ற மாநிலங்களைவிட அதிகமாகச் சட்டம் ஒழுங்கு கெட்டிருக்கிறது' என்று நீதிபதியின் தீர்ப்புக் கிடைக்குமானால், அடுத்த நாளே அண்ணா அமைச்சரவை இராஜினாமா செய்யும்; இப்படி ஒரு நீதி விசாரணை நடத்தக் காங்கிரசார் தயாரா?

தமிழ் நாட்டில்தான் சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை, சனநாயகம் அனைத்தும் காக்கப்பட்டு வருகிறது. தமிழகம்தான் இந்தியாவிலும் தலைசிறந்து விளங்குகிறது. இதனை, சஞ்சீவிரெட்டியைக் கேட்டால் சொல்லுவார்; வி. வி. கிரியைக் கேட்டால் சொல்லுவார்!

இங்குள்ள காங்கிரசார் எவ்வளவு ஆத்திரமூட்டினாலும், இங்கே அண்ணா ஆட்சி, ஒழுங்கை—அமைதியை நிலைநாட்டுவதிலேயே கவனம் செலுத்தி வருகிறது. இது காமராசருக்கும், பக்தவத்சலத்துக்கும் பிடிக்கவில்லை."

இருப்பதையும் இழக்கும் நேரம் வந்துவிடும்!

பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவராக இருந்த காமராசரும், தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் சுப்பிரமணியமும், காங்கிரசின் நாலாந்தரப் பேச்சாளர்களாகிவிட்டனர்!

இன்றையத் தினம் அவர்களின் பேச்சைக் கேட்டுத்தான்—பத்திரிகைகளில் படித்துத்தான் இப்படிச் சொல்கிறேன்; இதே போக்கில் அவர்கள் பேசிக்கொண்டிருந்தால், வரும் 1972 தேர்தலில், உள்ள இடங்களையும் இழந்துவிடுவார்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள், எதையும் பேசமாட்டார்; எதை—எங்கு—எப்படிப் பேசலாமென எண்ணி, அதன்பின் பேசிக் கட்சியை வளர்த்ததால் தான், இன்று கழகம் கோட்டையிலே கோலோச்சுகிறது!

தோல்வியைத் தழுவியவர்கள் நிலைமை இதுதானா?

காந்தியார் வளர்த்த காங்கிரசைத் தேய்த்துக்கொண்டே வந்து, இறுதியில் தோல்விப் பள்ளத்தாக்கிலும் தள்ளிவிட்டார் காமராசர்!

அனைத்திந்திய அளவிலும் காங்கிரசுத் தோல்விக்குக் காமராசர்தான் காரணமென்று வடக்கிலுள்ளவர்கள் பேசுகிறார்கள்.

தங்களையே தோல்விக்கு ஆளாக்கிக் கொண்ட காமராசரும், சுப்பிரமணியமும், பழைய போக்கை மாற்றிக்கொண்டால் தான் காங்கிரசு வளரும்! நான் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவன் என்றாலும், 'காங்கிரசு அழியக் கூடாது' என்ற நல்லெண்ணத்தில் இதைக் கூறுகிறேன்.

நமது தோற்றம் அப்படியா?

'குண்டர்களையும் அடியாட்களையும் நம்பி தி. மு. கழக ஆட்சி நடைபெறுகிறது' என, காமராசர் பேசியிருக்கிறார்; நம்மையெல்லாம் பார்த்தால் அவருக்குக் குண்டர்களாகவும், அடியாட்களாகவும் தெரிகிறோமாம்!

தர முடியுமா பட்டியல்?

நாம் பலாத்காரவாதிகளெனவும், தி. மு. கழகம் வன்முறையை உண்டாக்குவதாகவும் அவர் பேசுகிறார்.

அவரைக் கேட்கிறேன்—திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் மூண்ட கலகங்களின் பட்டியலைத் தர முடியுமா? காங்கிரசுக் குண்டர்களால் ஏற்பட்ட கலகங்களின் பட்டியலைத் தர என்னால் முடியும் — நீங்கள் தயாரா?

காங்கிரசின் பலாத்காரம் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?

அண்ணா அவர்கள் காந்தியாரைப் பின்பற்றிவருபவர்; 'சமாதான முறையில்தான் போலீசுத்துறை பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்; சுடக்கூடாது; பொருட்சேதம் ஏற்பட்டாலும், உயிர்ச் சேதம் ஏற்படக்கூடாது; பொருட்சேதம் ஏற்பட்டால் அந்தப் பொருளை மீண்டும் பெறலாம்; ஆனால் உயிர்ச் சேதம் ஏற்பட்டால் இழந்த உயிரை மீண்டும் பெற முடியாது; ஆகவே, அன்பு வேண்டுகோளினாலேயே பலாத்காரத்தைத் தடுப்பதற்கு முயற்சியுங்கள்' என்ற வேண்டுகோளினை பல காலமாகவே விடுத்துக்கொண்டு வருகிறார்; அந்த நிலையிலுள்ளவரைப் பலாத்காரத்தில் ஈடுபடுத்த எண்ணினால், காங்கிரசின் பலாத்காரம் எத்தனை நாளைக்கு நிலைக்கும்?



எவ்வகையிலும் குறைந்ததன்று

அறிஞர் அண்ணா என்றுமே மாணவர்களை வெறுக்க மாட்டார்! எந்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேதனையால்பேசினார்களோ, அதே மருத்துவக் கல்லூரியில்தான் என் பிள்ளைகளும் படிக்கிறார்கள்; எனக்கும் அம்மாணவர்களிடத்தில் அனுதாபம் உண்டு; எனது இந்த அனுதாபம், கருத்திருமனின் அனுதாபத்தைவிட — விநாயகத்தின் அனுதாபத்தைவிட எந்த வகையிலும் குறைந்ததன்று!

காமராசரின் இன்றைய நிலை?

முன்னாள் முதலமைச்சர்களான காமராசரும், பக்தவத்சலமும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் இவ்வளவு பொறுமையாக நடந்ததாகச்சரித்திரம் உண்டா? ஆனால் அண்ணாவின் இத்தகு பொறுமையைக் கண்டு எல்லோரும் வியக்கின்றனர்!

'அடிபட்ட மூன்று பேரைப் பார்க்க முடியவில்லை' என்று அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவராக இருந்த காமராசர் கூறியிருக்கிறார். சாதாரண தொழிலாளி முதல் பலரும் அனுதாபத்துடன் மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்தவர்களைக் கண்டிருக்கின்றனர்; காமராசரால் மட்டும் பார்க்க முடியவில்லையென்றால், அவருடைய தரம் அதற்குள் அவ்வளவு குறைந்து விட்டதா?

தாழ்வுறச் செய்துவிட்டனர்!

காந்தியார் உயிர்மூச்சு மதுவிலக்கு; இந்த மதுவிலக்கை நிறைவேற்றுவதற்கென அரசியல் சட்டத்தில் விதி உண்டு. எல்லா மாநிலங்களிலும் அதை மேற்கொண்டவர்கள் இப்போது கைவிட்டு விட்டனர்; அவர்கள் கைவிட்ட நேரத்தில் காமராசர் அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்! மதுவை மக்களிடம் பரப்பியபோதும், கண்டிக்காமல் — எதிர்க்காமல்— அவர்களைக் கட்சியைவிட்டு நீக்கவும் செய்யாமல், காங்கிரசின் தேர்தல் வெற்றிக்கு அவர்களையும், மதுவிலக்கு ரத்தையும் பயன்படுத்தினார்!

எந்த நிலையில் செய்திகள்?

திராவிட முன்னேற்றக் கழகம் நல்லது செய்தாலும், அதனை ஒப்புக்கொள்ளுவதற்குக் காமராசருக்கும், சுப்பிரமணியத்துக்கும் மனமில்லை!

கடந்த ஆறு மாத காலமாக ஏனைய மாநிலங்களிலிருந்து காங்கிரசிலுள்ள 'துப்பறிவோர்' மூலமும், ஏடுகள்மூலமும் டெல்லிக்கு வரும் செய்திகள் பயங்கரமாக இருக்கின்றன!

'தமிழகத்தில் மட்டும்தான் நல்ல ஆட்சி நடக்கிறது' என டெல்லிக்குச் செய்தி வருகிறது!

சவான் தந்த சான்று!

தமிழகத்தில் சட்டம்—ஒழுங்கு கெட்டதா இல்லையா என்பதைச் சொல்லவேண்டியவர் சவான்; அவர் சொல்கிறார்—'தமிழகத்தில் அமைதியான ஆட்சி நடக்கிறது' என்று!

கோவையில் தேசியக் கொடியை எரித்தபோது, இது குறித்துப் பல உறுப்பினர்கள் கேள்வி கேட்டனர்; அதற்குப் பதிலளிக்கையில் சவான் என்ன சொன்னார்?—தமிழக முதல்வர் நிதானமாக நடந்துகொள்பவர்; நிச்சயம் நடவடிக்கை எடுப்பார்; அவர்மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு' என்று! காங்கிரசார் எப்படியெப்படியோ தூண்டியும் பலன் இன்றிப் போவது தமிழகத்தில்தான்!

எப்படிச் சொல்ல இயலும்?

வடக்கிலுள்ள சில மாநிலங்களுக்குத் தலைமையமைச்சர் பேசப் போகும்போது, நான்கு—ஐந்து எதிர்க் கட்சிகள் சேர்ந்து கறுப்புக் கொடி காட்டுகின்றன; அதில் ஐம்பது பேர்—நூறு பேர் என்று கைது செய்யப்படுகிறார்கள்; இதை வைத்து, 'டெல்லியில் சட்டம் இல்லை; ஒழுங்கு இல்லை' என்று சொல்லிவிட முடியுமா?

இதோ—நேர்மை, சட்டம்—ஒழுங்கு, அமைதி ஆகியவை நிலைகுலையாது இருக்கின்றன வென்றால், அது, தமிழகத்தில் தான்!

மாணவர் கிளர்ச்சி நடந்த நேரத்தில் அண்ணா அவர்களும், நெடுஞ்செழியன், கருணாநிதி ஆகியோரும் அறிக்கைமேல் அறிக்கைவிட்டு மாணவர்களை அமைதிப்படுத்தினார்கள்.

1965-ல் நடைபெற்ற இப்போராட்டத்தில்—பக்தவத்சலத்தின் ஆட்சியில் பொள்ளாச்சி, குமாரபாளையம், சிதம்பரம், நாமக்கல், திருச்செங்கோடு ஆகிய ஊர்களில் 150-பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

வாதத்திற்காக நான் சொல்வது பொய் என்றால்—சட்டமன்றத்தில் பக்தவத்சலம் வாயால் சொன்னபடி—50-பேர் கொல்லப்பட்டார்கள்.

இன்றோ! ஒருவர்கூடத் துப்பாக்கிச் சூட்டில் இறக்காமல், அன்பால் — ஆற்றலால் அறிஞர் அண்ணா அமைதிப்படுத்தினார்!

அறிஞர் அண்ணா எங்கே—பக்தவத்சலம் எங்கே!

சொல்லித் திரியட்டும் அவர்கள்- அமைதி காப்போம் நாம்!

காங்கிரசார் எவ்வளவுதான் கோபமுண்டாக்கி அமைதியைக் குலைக்க முயன்றாலும், கழக அரசு அமைதியைக் காத்தே தீரும்!

பச்சைக் கிளியைப் பார்த்து, 'உன் நிறத்தைப் பார்க்க அசிங்கமாக இருக்கிறது' என்று காகம் சொல்லுவதா?

நாடெல்லாம் சுற்றித்திரிகின்ற நங்கை, வீட்டிலேயே தங்கியிருக்கும் நங்கையைப் பார்த்து, 'வீட்டிலேயே இருப்பதால் அவள் கெட்டுவிட்டாள்' என்று சொன்னாளாம்.

அதுபோல், அகில இந்தியாவிலும் சட்டத்தையும் ஒழுங்கையும் கெடுத்துச் சீரழிக்கிறது காங்கிரசு! அதுதான் சொல்லுகிறது—'தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு இல்லை' என்று!"

ஏ. பி. சனார்த்தனம் மேலவை உறுப்பினரானார்

டி. கே. சண்முகம், டி. வி. நாராயணசாமி ஆகியோரும் நியமனம்

சென்னை, ஏப். 16—

தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களாக திரு. ஏ. பி. சனார்த்தனம் எம்.ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி, ஔவை டி. கே. சண்முகம் ஆகிய மூவரையும் தமிழக ஆளுநர் நியமித்துள்ளார்.

மேலவையில் தற்போது நியமன உறுப்பினர்களாக இருந்து வரும் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார், கவிஞர் எஸ். டி. சுந்தரம், திருமதி திரிபுரசுந்தரி ஆகியோரின் பதவிக்காலம் ஏப். 20-ஆம் நாளுடன் முடிவடைகிறது; இதனால் ஏற்படும் காலி இடங்களுக்கே மேற்படி மூவரும் ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஏ. பி. சனார்த்தனம் அவர்கள் தமிழ்–ஆங்கிலம்–தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர்; சமூகச் சீர்திருத்தப் பிரசாரப் பணியில் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டுள்ளவர்; பச்சையப்பன் கல்லூரியில் படித்து எம்.ஏ. பட்டம் பெற்றவர்; வயது 48.

முத்தமிழ்க் கலா வித்வ ரத்தின—ஔவை டி. கே. சண்முகம் அவர்கள், கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நாடகக் கலைத் துறைக்கு ஆற்றிவந்திருக்கும் அரும் பணிகளை நாடறியும். தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்குப் இவர், கலைத்துறை மூலம் இடையறாது பணியாற்றிவருகிறார்.



ஏ. பி. சனார்த்தனம் எம். ஏ.

நடிகமணி டி. வி. நாராயணசாமி அவர்களும், நாடக—திரைப்படத் துறைகளில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக ஈடுபட்டு தமிழ் மக்களின் உள்ளங்கவர்ந்த கலைஞராவார். சமுதாய மறுமலர்ச்சிக்கு கலைத்துறை வாயிலாக இவர் ஆற்றிவரும் பணி அளவிடற்கரியது.

சென்னையில் வால்காகிராடு துணைமேயர்

நல்லெண்ண அடிப்படையில் வருகை

சென்னை, ஏப். 17—

சோவியத் நாட்டின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நகரான வால்காகிராடு மாநகராட்சியின் துணை மேயர் திரு. அலெக்சாண்டர் பி. மாமெஷின் தலைமையில் மூன்று பேரடங்கிய நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று இன்று சென்னை வந்தடைந்தது.

சென்னை மேயர் டாக்டர் அப்துல் பேக், துணை மேயர் பவளவண்ணன், மாநகராட்சி மத்திய குழுத் தலைவர் வி முனுசாமி, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் குட்புசாமி, சைதை வட்டக் குழுத் தலைவர் சா. கணேசன், ஆணையர் திரு. அம்பாசங்கர் ஆகியோர் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

சென்ற ஆண்டில், வால்காகிராடு நகருக்கும்—சென்னை நகருக்கும் ஏற்பட்டுள்ள நட்புறவு அடிப்படையில், சென்னை மாநகராட்சி சார்பில், அன்றைய மேயர் திரு. இரா. சம்பந்தம் தலைமையில் எழுவரடங்கிய தூதுக்குழு, வால்காகிராடுக்குச் சென்று வந்தது நினைவிருக்கலாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு. சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.